# வந்தவாசிநகராட்சி

## கூட்டஎண்.4, 2022-2023

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 3வது அட்டவணையில் 2 (3) விதியின் கீழ் இந்நகரமன்றத்தின் சாதாரண கூட்டம் 08.08.2022 தேதியன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நகரமன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் மற்றும் நகரமன்ற துணைத்தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களும், தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருக்குறள்:-

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.'

பொருள்- நல்வாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

### மன்றப்பொருள்

120. ஜீன் -2022 மாதத்திற்கான ஆணையாளர் அவர்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

பதிவுசெய்யலாம்.

121. வந்தவாசி நகராட்சி ஜீன் 2022ம் மாதம் பிறப்பு, இறப்பு, இறந்து பிறந்த குழந்தைகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ஆண்/பெண்-ஜீன் -2022

| வ.எண். | விவரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | பிறப்பு | 2 | 2 | 4 |
| 2. | இறப்பு | 4 | 4 | 8 |
| 3. | இறந்துபிறந்தவை | 0 | 0 | 0 |

அலுவலககுறிப்பு

பதிவுசெய்யலாம்.

122. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பொட்டிநாயுடு தெரு விரிவு சர்வேவார்டு-பி, பிளாக்-3, நகரளவுஎண்கள். 9/6(A), 9/7Aமற்றும்9/10Apt (பழையசர்வேஎண்கள்.526/1, 527/1pt, மற்றும் 528/2) ஆகியவற்றில் 0.41 ஏக்கர் பரப்பில் அமையும் அனுமதியற்ற மனைப்பிரிவுக்கு, திருவண்ணாமலை உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் நடவடிக்கை கடித ந.க.எண்.911/2020/ தி.மலைநாள்.18.05.2022ல் ம.வ/வ.மா/ந.ஊ.உ.இ.(தி.மலை) எண்.105/2022 மூலம் கொள்கை ஒப்புதல். வழங்கப் பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட மனைப்பிரிவில் மொத்தம் மனைகள் 14 எண்ணிக்கை மனைகள்உள்ளதாகவும், அதில் 8 எண்ணிக்கை மனைகள் ஏற்கெனவே விற்கப்பட்டுள்ளதாகவும், இதில் தற்போது 6எண்ணிக்கை மனைகள் விற்கப்படாமல் உள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 629.00 சதுர அடி பரப்பளவு உள்ள இடம் பொதுதிறவிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட மனைகளுக்கு கூராய்வுக்கட்டணம்ரூ.2500/-செலுத்தப் பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காண்வரன் முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் இணைய தளம் வாயிலாகவும், நேரிலும் செலுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்படவேண்டும் எனவும், மேலும் விற்கப்பட்ட / விற்கப்படாத மனைகளைப் பொருத்தமட்டில் ஒரு தனிமனைக்கோ அல்லது ஒரு சில மனைகளுக்கோ அல்லது மொத்தமனைகளுக்கோ மனுதாரரால் கட்டணம் செலுத்தப்பட்டால் சம்மந்தப்பட்ட மனைகளைவரன் முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மேலும் மேற்கண்டகட்டணங்களை தவிர வேறு கட்டணம் ஏதும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியால் வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண்.100, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ4(3)த்துறைநாள். 01.07.2019ன்படி வந்தவாசி சார்பதிவாளர் ஆவணஎண்.2000/2022, நாள்.10.05.2022ன் வழியாகமனைப்பிரிவு, சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவற்றை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களுக்கு தானமாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு –</u>

1. மன்றம்ஒப்புதல்வழங்கலாம்.

**(ந.க.எண்.983/2022/எப்1)**

123. வந்தவாசி நகராட்சியின் 1 முதல் 24 வார்டுகளில் தெரு விளக்குகள் பராமரிப்பு பணிக்கு கீழ்காணும் தெருவிளக்கு உபகரணங்கள் ராசி எலக்ட்ரிக்கல்ஸ், ஆரணி ரோடு, வந்தவாசியில் சப்ளை பெற்று பராமரிப்பு பணிகள் மேற்கொண்ட வகையில் தோராய செலவினம் ரூ.1.00 (ஒரு இலட்சம்) மேற்கொண்டது மன்றத்தின் அனுமதிக்கு, பார்வைக்கும், வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>–

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.514/2022/இ1)

124. வந்தவாசி நகராட்சி வார்டு 1 முதல் 24 வார்டுகளில் உள்ள சாலைகளை Auto Cad வரைந்து "Road Ledger" பணிசெய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

1. திரு.R.சுரேஷ் – 22,000/-
2. திரு.V.K.சந்தோஷ்–21,500/-
3. திரு.S.குமார் – 21,000/-

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.குமார், அவர்களின் பணியினை மேற்கொண்டது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>–

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1063/2022/இ1)

125. வந்தவாசி நகராட்சி வார்டு எண்.1 முதல் 24 வரை உள்ள வார்டுகளில் பிரதான பைப்லைன் மற்றும் குறுக்கு தெரு பைப்லைன்கள் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால், அதனை சீரமைக்கவும், குடிநீர் பிரச்சனை சரிசெய்திட ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>–

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.514/2022/இ1)

126. வந்தவாசி நகராட்சி வார்டு எண்.8ல் காயிதே மில்லத் நகர் பிரதான சாலையில் மேல்மருவத்தூர் சாலையிலிருந்து மழைநீர் வடிகால்வாய் அரசு பொது மருவத்துமனை வழியாக காயிதே மில்லத் நகர் வந்தடைந்து மழைநீர் வடிகால்வாய் தண்ணீர் போக வழியின்றி தேங்கி நிற்பதால், தொற்று நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சிறுபாலம் அமைத்து, ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்வாய் இணைக்க தோராய மதிப்பு ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) ஆகும். ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>–

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.514/2022/இ1)

127. வந்தவாசி நகராட்சி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-2022ம் ஆண்டு இராஜ்ய சபா உறுப்பினர் மரு.அன்புமணி இராமதாஸ் அவர்கள் பரிந்துரை செய்துள்ள வந்தவாசி நகராட்சி ஆற்காடு திண்டிவனம் சாலை ஐந்துகண் பாலம் சந்திப்பு பகுதியில் உயர் மின்கோபுர விளக்கு அமைத்தல் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.7.00 (ஏழு இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1272/2022/இ1)

128. வந்தவாசி நகராட்சி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 2022-2023ஆம் ஆண்டு வார்டு 10ல் உயர்மின்கோபுர விளக்கு அமைத்தல் பணி மதிப்பீடு தொகை ரூ.4,35,000/- ஆகும். மேற்கண்ட பணியினை பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.1,45,000/-யினை J.அப்துல் பாசித் என்பவர் கொடுத்துள்ளார். மேற்கண்ட பணியினை செய்ய மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 514 /2022/இ1)

129. வந்தவாசி நகராட்சி கோட்டைதெரு வார்டு-2 மற்றும் வார்டு-3ல் அமைந்துள்ள துலுக்கானத்தம்மன் கோயில் மற்றும் அய்யனார் கோயில் திருவிழாவை முன்னிட்டு சாலையின் மேடு பள்ளங்களை சரிசெய்திடவும், JCB கொண்டு முட்புதர்களை அகற்றிடவும், நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு(15)ன் கீழ் பணியினை மேற்கொண்டமைக்கு உண்டான செலவின தொகைக்கு ரூ.45,000/- ஆகும். மேற்கொண்ட பொருளினை மன்றத்தின் பார்வைக்கு, ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 514/2022/இ1)

130. வந்தவாசி நகராட்சிபகுதிகளில் வார்டு எண்.1 முதல் 24 வார்டுகளில் உள்ள சின்டெக்ஸ் டேங் மற்றும் மினிபவர் பம்புகள் பராமரிப்பு அமைத்தல் பணிக்குஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.07.2022 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திரு.S.வீரராகவன் | மதிப்பீட்டை விட 0.02%குறைவு |
| 2. | திரு.E.மஜீத், | மதிப்பீட்டை விட 0. 04% அதிகம் |

அலுவலக குறிப்பு-

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2)ஒப்பந்தப்புள்ளிகளில்மதிப்பீட்டைவிட 0.02%குறைவு வரப்பெற்றுள்ளதிரு.S.வீரராகவன்,ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண்.514/2022/இ1)

131. வந்தவாசி நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.1 முதல் 24 வார்டுகளில் உள்ள பிரதான பைப்லைன் மற்றும் குறுக்குதெரு பைப்லைன் பழுதுகள் சீரமைக்கும் பணிக்குஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.07.2022 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திருமதி.J.சூடாமணி, | மதிப்பீட்டை விட 0.02 %குறைவு |
| 2. | திரு.V.குமார், | மதிப்பீட்டை விட 0. 04 % அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2)ஒப்பந்தப்புள்ளிகளில்மதிப்பீட்டைவிட 0.02%குறைவு வரப்பெற்றுள்ள,திருமதி.J.சூடாமணி, ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண்.514/2022/இ1)

132. வந்தவாசி நகராட்சி பகுதி வார்டு எண்.18ல் K.R.K தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் பணிக்குஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.07.2022 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திருமதி.J.சூடாமணி, | மதிப்பீட்டை விட 0.01%குறைவு |
| 2. | திரு.V.குமார், | மதிப்பீட்டை விட 0. 03% அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2)ஒப்பந்தப்புள்ளிகளில்மதிப்பீட்டைவிட 0.01%குறைவு வரப்பெற்றுள்ள,திருமதி.J.சூடாமணி, ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண்.514/2022/இ1)

133. வந்தவாசி நகராட்சிஅலுவலகத்தில் கம்யூட்டர் ஆப்ரேட்டர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்தல் (01.08.2022 முதல் 31.10.2022 வரை) பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.07.2022 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திரு.V.சுந்தரம், | மதிப்பீட்டை விட 0.00%குறைவு |
| 2. | திரு.கோ.முரளி | மதிப்பீட்டை விட 6. 64% அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2)ஒப்பந்தப்புள்ளிகளில்மதிப்பீட்டைவிட 0.00%குறைவு **மதிப்பீட்டுக்கு சமமாக**வரப்பெற்றுள்ள,திரு.V.சுந்தரம்,ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம்ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண்.514/2022/இ1)

134. வந்தவாசி நகராட்சிதெருவிளக்கு மற்றும் **அனக்காவூர் தலைமை நீரேற்று பணியாட்கள் ஊதியம் உட்பட தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் உபகரணங்கள் உட்பட** (01.08.2022 முதல் 31.10.2022 வரை) **சப்ளை செய்தல் பணிக்கு** ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.07.2022 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திரு.S.**வீரராகவன்** | மதிப்பீட்டை விட 0.02%குறைவு |
| 2. | திருமதி.J.**சூடாமணி,** | மதிப்பீட்டை விட 0. 10% அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2)ஒப்பந்தப்புள்ளிகளில்மதிப்பீட்டைவிட 0.02%குறைவு வரப்பெற்றுள்ள,**திரு.**S.**வீரராகவன்**,ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண்.514/2022/இ1)

135. வந்தவாசி நகராட்சிஅலுவலக **வளாகத்தில் பொறியாளருக்கு அலுமினிய** (partition) **மற்றும் புதிய கழிவறை அமைத்தல் பணிக்கு** ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.07.2022 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திரு.**ஆ.அஜீஸ்,** | மதிப்பீட்டை விட 0.02 %குறைவு |
| 2. | திரு.E.மஜீத், | மதிப்பீட்டை விட 0. 05% அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2)ஒப்பந்தப்புள்ளிகளில்மதிப்பீட்டைவிட 0.02%குறைவு வரப்பெற்றுள்ள,திரு.**ஆ.அஜீஸ்,** ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண்.514/2022/இ1)

136. வந்தவாசி நகராட்சி **காயிதே மில்லத் நகர், பிரதான சாலையில் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு** ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.07.2022 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திரு.**ஆ.அஜீஸ்,** | மதிப்பீட்டை விட 0.04%குறைவு |
| 2. | திரு.E.மஜீத், | மதிப்பீட்டை விட 0. 20% அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2)ஒப்பந்தப்புள்ளிகளில்மதிப்பீட்டைவிட 0.04%குறைவு வரப்பெற்றுள்ள,திரு.**ஆ.அஜீஸ்,** ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண்.514/2022/இ1)

137. வந்தவாசி நகராட்சி வார்டு எண்.16ல் உள்ள யாதவர் தெரு பகுதியில் புதியதாக கட்டியுள்ள நியாய விலை கட்டிடத்தின் மேல் வந்தவாசி SS-37 மின் இணைப்பு வழங்ககோரி 11.06.2022ம் தேதியன்று ONLINE-ல் பதிவு செய்யப்பட்டு அதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களிடமிருந்து 15.07.2022 வரப்பெற்ற கடிதத்தில் மின் மாற்றியின் தாழ்வழுத்த மின்கம்பியானது போதுமான இடைவெளி இல்லாமல் இருப்பதால் மின் விபத்திற்கு வழிவகை செய்யும் வகையில் இருப்பதாலும், மின்விபத்தினை தவிர்க்கும் பொருட்டு, பொதுமக்களின் நலன் கருதியும் மின்வாரியத்திடமிருந்து புதிய மின்கம்பம் அமைத்து மின் இணைப்பு தருவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.26,360/- SE/TANGEDCO/TEDC/TVMALAI என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து தொகையினை செலுத்துவதற்கு நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகையினை செலுத்தவும், மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண்.1678/2021/இ1)

138. வந்தவாசி நகராட்சி வார்டு எண்.18ல் K.R.K, தெருவில் வரும் தேர்திருவிழாவை முன்னிட்டு தேர் அவ்வழியாக செல்லயிருப்பதால் சிறிய பள்ளங்களை சரிசெய்திட சிமெண்ட் சாலை பழுதுபார்ப்பு பணிக்கு தோராய மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும். பொதுநிதி பணியில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண். 514/2022/இ1)

139. வந்தவாசி நகராட்சி வார்டு 1 முதல் 24 வரை உள்ள பொது மக்களுக்கு சொத்துவரி, தொழில்வரி, குடிநீர்கட்டணம், குத்தகை இனங்கள், செலித்திடவும், டெங்குநோய்கள், கோவிட்-19 தொற்றுநோய்கள் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மக்கும் குப்பைகள், மக்காதகுப்பைகள் தனித்தனியாக பிரித்து வழங்குவது குறித்து ஒளிபெருக்கி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு வந்தவாசி நகராட்சி சுகாதாரப்பிரிவில் பயன்படுத்திவரும் வாகனங்கள் 1.TN25/AW/3043, 2.TN25/AW/3066 மற்றும் 3.TN25/BX/1193 ஆகிய மூன்று வாகனங்களுக்கு மைக்செட், 40V Horon, Speaker wire, 4 GBmc, Tag with Tape பொருத்திய வகையில் செலவினம் ரூ.7,740/-ஐ SRI ABIRAMI, Electronics என்ற நிறுவனத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நிர்வாக நலன் கருதியும், அவசரம் அவசியம் கருதியும், பொது சுகாதார வாகனங்களுக்கு மைக்செட் பொருத்தியதற்கு செலவினம் ரூ.7,740/- தொகை வழங்கப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண்.998/2022/எச்1)

140. வந்தவாசி நகராட்சி பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள், டெங்கு நோய் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழிக்கவும், தொற்று நோய்களை பெருந்தாக்க அளவில் தோன்றா வண்ணம் துரிதப்படுத்தவும், முதற்கட்டமாக 12 நபர்களை நாள் ஒன்றுக்கு ரூ.250/-வீதம் இரண்டு மாத காலத்திற்கு வைத்துக்கொள்ள நகரமன்றம் தீர்மானம் எண்.116, நாள்.30.06.2022ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தற்போது மழைக்காலம் தொடர்வதால் 12 நபர்கள் போதுமானது இல்லை, எனவே ஏற்கெனவே இருந்த 30 நபர்களை பணிக்கு அமர்த்திக்கொள்ளவும், மேலும் நகரமன்ற தீர்மானம் எண்.116, நாள்.30.06.2022-ல் ரத்து செய்து தற்போது 10.08.2022 முதல் 30.09.2022 முடிய 51 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.250/-வீதம் 30 நபர்களை தற்காலிகமாக வைத்துக்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3,82,500/- செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார நலன்கருதி மன்ற தீர்மானம் எண்.116, நாள்.30.06.2022 ரத்து செய்து தற்போது 30 நபர்களை தற்காலிகமாக வைத்துக்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 3,82,500/- மேற்கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க. எண்.1530/2022/எச்1)

141. வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்திவரும் டிப்பர் லாரி TN25/AW/3043 வாகனத்தின் FC காலம் 20.07.2022 உடன் முடிவடைந்து விட்டதால் பொது சுகாதாரம் அவசியம் கருதி, நிர்வாக நலன் கருதி பொது சுகாதார வாகனம் TN25/AW/3043ஐ பழுது நீக்கம் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் ஒப்படைத்து பழுது நீக்கம் செய்து கொள்ள ரூ.1,00,000/- ஒரு இலட்சம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி, பொது சுகாதாரம் அவசியம் கருதி பொது சுகாதார வாகனம் TN25/AW/3043-ஐ FC செய்துக்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில்பணிமேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.1042/2022/எச்1)

142. வந்தவாசி வட்டாட்சியர் அவர்களின் அலுவலகத்தில் 19.07.2022 வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற ஆடிகிருத்திகை திருவிழா கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஆடிகிருத்திகையை முன்னிட்டு காவடிகள் ஐந்து கண் பாலத்தில் இருந்து, பஜார் வழியாக வந்து நகராட்சி அலுவலகம் பின்புறம் உள்ள ஆஞ்சநேயர் கோயில் வந்தடைதல், காவடிகள் மற்றும் பொது மக்களுக்கு எவ்வித இடையூறுகளும் இல்லாமல் இருப்பதற்கு, ஒயிட் போக்கஸ் லைட் அமைத்து கொடுத்தமைக்கு செலவினம் ரூ.16,400/-க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி, நிர்வாக நலன் கருதி காவடிகள் பாதுகாப்பாக வருகைக்கு ஒயிட் போக்கஸ் லைட் வசதி அமைத்து கொடுத்தமைக்கு செலவினம் ரூ.16,400/- மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.1190/2022/எச்1)

143. திருவண்ணாமலை மாவட்டத்திற்கு அரசின் நலத்திட்டங்கள் மற்றும் புதிய கட்டிடங்கள் திறந்து வைக்க மாண்புமிகு.தமிழக முதல்வர் அவர்கள் வருகை புரிவதை முன்னிட்டு வந்தவாசி நகராட்சியின் சார்பாக வரவேற்பினை தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.51,108/-ஐ Kal Publication (P) Ltd., Vellore-க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நிர்வாக நலன் கருதி, தமிழக முதல்வர் வருகையை முன்னிட்டு நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.51,108/- Kal Publication (P) Ltd., Vellore-க்கு வழங்கிட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.1042/2022/எச்1)

144. வந்தவாசி நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-2022ம் ஆண்டு நிதியின் கீழ், வார்டு - 20, நாதமுனி தெருவில் சிமெண்ட் சாலை மற்றும் கால்வாய் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு கோரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவண்ணாமலையில் கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.5.00 ( ஐந்து இலட்சம்) ஆகும். மேலும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண்.514/2022/இ1)

145. வந்தவாசி நகராட்சியில் குடிநீர் பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வரும் வாகனம் TN97/Y/1138-ன் சின்டெக்ஸ் டேங்ஸ், ஸ்பிரிங் பிளேட் பழுது ஏற்பட்டுள்ளதை அவசரம் அவசியம் கருதி, குடிநீர் அவசியம் கருதி, உடன் பழுது பார்த்த செலவினம் ரூ.19,550/- (பத்தொன்பதாயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
   குடிநீர் அவசியம் கருதி சின்டெக்ஸ் டேங்ஸ் ஸ்பிரிங் பிளேட் பழுது அடைந்துள்ளதை பழுது பார்த்துக்கொள்ள செலவினம் ரூ.19,550/- க்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.1200/2022/எச்1)

146. வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தும் குப்பை வாங்கும் பேட்டரியால் இயங்கக் கூடிய வாகனம் (BOV) நான்கு வாகனங்கள் பழுது அடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், பழுது அடைந்த நான்கு வாகனத்தை கொடுத்து புதியதாக நான்கு (BOV) வாகனம் வாங்கி கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோர மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதாரஅவசியம் கருதி நான்கு (BOV) வாகனம் புதியதாக வாங்கி கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1277/2022/எச்1)

147. வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தும் வாகனங்கள் 1.பிளாஸ்டிக் பின்கள் பழுது அடைந்து உடைந்த நிலையில் அதனை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும், புஷ்கார்டு பழுது அடைந்துள்ளதாலும், பொது சுகாதாரம் அவசியம் கருதி கீழ்கண்ட விவரப்படி வாங்கி கொள்ள தோராய செலவினம் ரூ.2.00 (இரண்டு இலட்சத்திற்கு) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1.புஷ்கார்டு பின் 50 லிட்டர் கொள்ளளவு கொண்டது - 100 எண்கள்.

2.BOV வாகனத்திற்கு 80 லிட்டர் கொள்ளளவு கொண்டது - 60 எண்கள்.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி குப்பை சேகரம் செய்யும் பின்கள் 160 வாங்கி கொள்ள தோராய செலவினம் ரூ.2.00 (இரண்டு இலட்சத்திற்கு ) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1275/2022/எச்1)

148. வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தும் வாகனம் வீடு, வீடாக சென்று குப்பைகள் எடுக்கும் பேட்டரியால் இயங்கும் வாகனம் (BOV) 5 எண்ணிக்கை கொண்ட வாகனம் பழுது அடைந்து உள்ளதால் பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி உடன் பழுது நீக்கம் செய்ய தோராய செலவினம் ரூ.2.00 (இரண்டு இலட்சத்திற்கு) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **பழுது பார்க்கும் வாகனம் (BOV) எண்கள்.** 1380, 1412, 2449, 2483, 2820

அலுவலக குறிப்பு—

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி உடன் பழுது பார்த்துக்- கொள்ள தோராய செலவினம் ரூ.2.00 (இரண்டு இலட்சத்திற்கு ) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1276/2022/எச்1)

149. வந்தவாசி நகராட்சியில் 24 வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்களை சப்ளை செய்யும் SB & CO பெரம்பூர், சென்னை என்பவருக்கு ஜீலை 2022 உடன் காலம் முடிவடைவதால் அரசிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதிக்கு பிரேரணை அனுப்பப்பட்ட நிலையில் அவசரம் அவசியம் கருதி ஆகஸ்ட்—2022 ஒரு மாதத்திற்கு மட்டும் நகரமன்ற அனுமதிக்கும், தோராய செலவினம் ரூ. 12.00 (பன்னிரெண்டு இலட்சம்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. தூய்மை பணியாளர்களை சப்ளை செய்யும் காலம் 7/2022 உடன் முடிவடைவதால் அரசிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பிரேரணை அனுப்பிடவும், 8/2022 ஒரு மாதத்திற்கு மட்டும் தோராய செலவினம் ரூ. 12.00 (பன்னிரெண்டு இலட்சம்) மன்ற அனுமதிக்கு ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.2063/2017/எச்1)

150. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண். ஒ.மு.ஐ3/ 43475/2022 நாள்.28.07.2022ல் உள்ள கடிதத்தில் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் சென்னை மாநகரத்தில் 44வது செஸ் ஒலிம்பியாட்போட்டி நடைபெறுவதை முன்னிட்டு விளம்பரத்திற்காக 250 லோகோ கட் அவுட்கள் (6'x4' அடிகள் தயாரிக்கப்பட்டது என்றும் அதன் போக்குவரத்திற்கும் சேர்த்து மொத்த செலவுத்தொகை ரூ.2,13,500/— எனவும் இதனை இம்மாவட்டத்திலுள்ள 4 நகராட்சி ஆணையர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் தலா ரூ.42,700/— வீதம் 01.08.2022 அன்று மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது வங்கிக்கணக்கிலோ ஒப்படைக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வழங்கிய செஸ் ஒலிம்பியாட் போட்டி விளம்பரத்திற்காக லோகோ கட்அவுட்கள்(6'x4' ) இந்நகராட்சியின் முக்கிய வீதிகள் மற்றும் சாலைகளில் பொருத்தப்பட்டது. எனவே திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வழங்க கோரிய தொகை ரூ.42,700/—ஐ மாவட்ட ஆட்சியர் கடிதத்தில் தெரிவித்துள்ள வங்கிக் கணக்கில் நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1278/2022/எப்1)

151. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளின் சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதரத்தை உறுதி செய்திட புதிய கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை Smart card பயோமெட்ரிக் and QR code உடனான அடையாள அட்டை (ID card) தயாரித்து வழங்குதல், விற்பனை சான்றிதழ், (Certificate of vendors) நகர தெரு விற்பனை திட்டம் (CSVP) விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருமாறு வரப்பெற்ற 16.06.2022ந் தேதிய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1 கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு இணையதளம் மூலம் ரூ.4.00 இலட்சம் தோராய மதிப்பீட்டில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | Sense Image Technologies, Private Limited, No.51, Rattha Tek meadows Town-C, 5th Floor, Sholinganallur, OMR, Chennai. | ரூ.700/ - ஒருவருக்கு | குறைவு |
| 2. | White OX Limited, No.52, Sholinganallur, Chennai. | ரூ.900/ - ஒருவருக்கு | அதிகம் |

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் உள்ள Sense Image Technologies, Chennai. நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும், உத்தேச செலவினத்தொகை ரூ.2,80,000/-க்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1365/2020/எப்1)

152.வந்தவாசி நகராட்சியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ எட்டியம்மன், அருள்மிகு ஸ்ரீ தண்டு மாரியம்மன் ஆலய ஆடிமாத திருவிழா முன்னிட்டு 26.07.2022 முதல் 03.08.2022 வரை வெகு சிறப்பாக நிகழ்ச்சிகள் நடைபெறுவதால் கோவில் ஆலயம் அதனை சார்ந்த தண்கொரமேடு, கொள்ளு செட்டிபாறை இடங்களில் JCB கொண்டு அகற்றிட விலைப்புள்ளி பெற்று JCB கொண்டு முட்செடி புதர்களை நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு 1 (ஒரு) மணி நேரத்திற்கு ரூ.1000/- வீதம் 12 மணி நேரத்திற்கு ரூ.12,000/- செலவினம் மேற்கொண்டது மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி ஆலயம் அதனை சுற்றியுள்ள தண்கொரமேடு, கொள்ளுசெட்டிபாறை ஆகிய பகுதிகளில் முட்செடி புதர்கள் JCB கொண்டு அகற்றியது செலவினம் ரூ.12,000/-மன்ற ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.1274/2022/எச்1)

153. வந்தவாசி நகராட்சியில் தெரு விளக்குகள் புதியதாக அமைப்பதற்கு கீழ்குறிப்பிட்ட வார்டுகளின் தெருக்களில் மின் கம்பம் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் மின் ஒயர் இணைக்கப்படாமல் உள்ளது. எனவே கீழ்குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளின் தெருக்களில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் புதியதாக மின் கம்பி (லைன்) அமைத்து கொடுப்பதற்கு மற்றும் புதிய மின் கம்பத்தில் மின்விளக்கு அமைத்திட அனுமதியும் வழங்கிட, மின்வாரியத்திற்கு மதிப்பீடு கோரவும் மற்றும் மதிப்பீடு தொகையினை அரசு நிதியிலோ அல்லது மான்யம் பெற்றோ, மின்வாரியத்திற்கு தொகை செலுத்தவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | தெருவின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | காட்டுநாயக்கன் தெரு. |
| 2 | 4 | கோட்டைக்குள் பள்ளிவாசல் முன்புறம் 5வது தெரு, கோட்டைக்குள் 4வது தெருவில். |
| 3 | 5 | பிள்ளையார் கோவில் தெரு, காஞ்சிபுரம் ரோடு |
| 4 | 6 | மக்தும் மரைக்காயர் தெரு. |
| 5 | 7 | நெமந்தகாரத்தெரு, 1,2,3 வது குறுக்கு சந்து தெரு மற்றும் விரிவு. |
| 6 | 8 | KSK நகர், உமர்பள்ளிவாசல் தெரு, காயிதே மில்லத் நகர் 3வது சந்து (சுக்கு காப்பி வீட்டு அருகில்) |
| 7 | 9 | 1.கலாய்காரதெரு, சர்ச் அருகில், 2. மியன்னா காதர்ஷா 1வது தெரு பின்புறம் – ஒயர் அமைத்தல் 3.பினாங்கு காதர்ஜண்டா தெரு, 4.மியன்னா 1வது குறுக்கு தெரு |
| 8 | 11 | காவலர் குடியிருப்பு பகுதி |
| 9 | 12 | காதர்ஜண்டா தெரு விரிவு மற்றும் மெயின்ரோடு, காந்திரோடு |
| 10 | 13 | L D–வங்கி, பொட்டிநாயுடு 2வது தெரு |
| 11 | 14 | பூங்கா நகர் விரிவு பகுதி. |
| 12 | 15 | சைக்கிள் வரதராஜ முதலி தெரு விரிவு. |
| 13 | 16 | பிராமணர் தெரு, யாதவர் தெரு. |
| 14 | 17 | இரட்டைவாடை செட்டிதெரு, பிள்ளையார் கோவில் தெரு, |
| 15 | 19 | செம்படத் தெரு (மீனவர் தெரு) |
| 16 | 20 | நாதமுனிதெரு, பாலுடையார் தெரு விரிவு, பாலுடையார் சந்துதெரு. |
| 17 | 21 | கேசவா நகர், சன்னதி புது தெரு விரிவு. |
| 18 | 22 | கெஜலஷ்மி நகர் பகுதி, பாலகிருஷ்ணன் தெரு |
| 19 | 23 | புதிய பேரூந்து நிலையம் ஐய்யப்பன் கோயில் MGR நகர் மற்றும் திண்டிவனம் சாலை. |
| 20 | 24 | பெரிய காலணி இர்சி அம்மன் கோயில் தெரு |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. நகராட்சி பகுதியில் வார்டு எண்.1 முதல் 24 வரையிலும் உள்ள தெருக்களில் மின் கம்பங்களில் ஒயர் இல்லாத கம்பங்களில் மின் ஒயர் அமைக்கவும், புதியதாக தெரு விளக்குகள் அமைக்கவும், அதற்கான செலவினங்கள் அரசின் நிதியிலோ அல்லது அரசு மான்யங்களில் செலவினம் மேற்கொள்ளவும், மதிப்பீடு கோரி, மதிப்பீட்டு தொகை கொடுத்திடவும், மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.514/2022/இ1)

154. வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்திவரும் வாகனம் TN25/AW/3043-ன் பேட்டரி பழுதாகி விட்டதால், அவசரம் அவசியம் கருதி பொது சுகாதாரம் அவசியம் கருதி, புதியதாக பேட்டரி வாங்கியதற்கும் மற்றும் லேபர் உள்பட அதற்குண்டான தொகை ரூ.9,200/- நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.9,200/- வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார வாகனம் TN25/AW/3043 பேட்டரி பழுது அடைந்துள்ளதை புதியதாக பேட்டரி வாங்கிய வகையில் நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.9,200/-வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1175/2022/எச்1)

155. வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி பூங்காவினை வந்தவாசி டவுன் ரோட்டரி சங்கம் மேற்படி பூங்காவினை புனரமைப்பு பணிகள் ரூ.1,10,000/- செலவில் மேற்கொள்வதற்காகவும், வந்தவாசி நகரமன்றத்தின் ஆதரவினை கேட்டுக்கொண்டதற்கிணங்க, புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி பூங்காவினை, வந்தவாசி டவுன் ரோட்டரி சங்கம், பூங்கா புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள வந்தவாசி நகரமன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி பூங்காவினை வந்தவாசி டவுன் ரோட்டரி சங்கம் சார்பாக புனரமைப்பு பணிகள் ரூ.1,10,000/-செலவில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1305/2022/எச்1)

156. அரசு முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ்துறை சென்னை அவர்களின் கடிதம் நே.மு.க.எண்.PR3/9346/2022 நாள்.23.07.2022-ன் படியும், பாரதப்பிரதமர் மற்றும் தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையின்படியும் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றுவதற்காக 5000 (ஐந்தாயிரம் மட்டும்) தேசிய கொடிகள் சப்ளை செய்துக்கொள்ள நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஷைன் டெக்ஸ்டைல்ஸ், திருப்பூர் என்ற நிறுவனத்தில் தேசிய கொடிகள் 5000 சப்ளை பெற்ற வகையில் தொகை ரூ.90,000/- செலவினம் மேற்கொண்டது மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தேசிய கொடிகள் 5000 சப்ளை பெற்ற வகையில் ரூ.90,000/- செலவினம் மேற்கொள்ளவும், மேலும் இச்செலவினத்தினை பொதுமக்களிடம் மேற்படி கொடியினை விற்பனை செய்தோ அல்லது நன்கொடை அல்லது CRS நிதியின் மூலம் ஈடுசெய்யவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.1385/2022/எச்1)

H. Jal... 8-8-...

நகரமன்றதலைவர்,
வந்தவாசிநகராட்சி.